**மூன்று மத்திய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2015**

---

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய மட்டத்திலுள்ள கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்திலுள்ள கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கைகளின் படி, நாட்டின் பொது கல்வித்துறை எதிர் நோக்கும் சவால்களை முன்வைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013 – 2017 ஐ அமுலாக்குவதற்காக நிதி ஆதரவை வழங்குவதற்கு கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்படுகிறது. கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் கல்வி அமைச்சாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான சமத்துவமான அணுகுதலை அதிகரித்தல், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்வியின் வலுவான ஆட்சி மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனாகும். நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது.

## 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு

மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான கல்வித்துறையின் மூன்று மத்திய நிறுவனங்களிற்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வித்துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய 245/2015 ஆம்

இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சு தொடர்பான 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டதிகாரச் சட்டத்தின் முதலாம் பட்டோலையின் 126 ஆம் இலக்க தலைப்பின் ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய 245/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றின் ஏற்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை திறைசேரி கணணி அச்சுத் தாள்கள் மற்றும் வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஆ) வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கொடை முகவர் | 200 | 26,000 | 5,144 | 33.72 | 4,822 | 55.33 | 7,913 |
| | **200** | **26,000** | **5,144** | **33.72** | **4,822** | **55.33** | **7,913** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 26,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 30.43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 7,913 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.33 மில்லியன் மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து 02 ஆண்டுகள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான கட்டிடங்களின் நிர்மாணத்திற்காக செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் ரூபா 657 மில்லியன் பாடசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட ‘‘சுகாதாரம் முதலாவது தேசிய நிகழ்ச்சித்திட்டம்’’ இற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தெழில்நுட்பவியல் பீட கட்டிடங்களின் திருத்தங்களிற்காக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 50 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீதான பௌதீக திட்டங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மொத்த ஒதுக்கீட்டில் உரிய நோக்கங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 19.63 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய திருத்த வேலைகளுக்கான பௌதீக

செயன்முன்னேற்றத்துடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

-------------------------------------

நாட்டின் பொதுக் கல்வித்துறை எதிர்நோக்கும் சவால்களை முன்வைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013 – 2017 இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய இலக்கு அவற்றின் மீதான 09 பணவளிப்பு இணைப்பு விளைவுகள் மற்றும் அதற்கான குறிகாட்டிகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் போது அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணவளிப்பு இணைக்கப்பட்ட விளைவுகள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 07 இன் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 343 பாடசாலை அதிபர்கள் மற்றும் 593 பிரதி அதிபர்கள் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனரென அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், 155 தேசிய பாடசாலைகளிலுள்ள அதிபர் பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக இருந்ததுடன் அவற்றில் 49 பாடசாலைகளில் அதிபர் பதவிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக இருந்தது.

(ஆ) மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்கள் உள்ளடங்கலாக அனைத்து வசதிகளும் வழங்கப்பட்ட போதிலும், பதுளை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள பஸ்ஸற தமிழ் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் தொழில்நுட்பப் பிரிவிற்கான வகுப்புகளிற்கும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் மத்திய கல்லூரியில் உயிரியல் தொழில்நுட்பவியல் விஞ்ஞான பிரிவிற்கான வகுப்புக்களிற்கும் தனியான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டில் முறையே தொழில்நுட்பப் பிரிவிற்காக 28,985 மாணவர்களும் விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவுகளுக்காக 118,550 மாணவர்களும் உட்சேர்க்கப்பட்டதுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப பிரிவிற்காக 42,514 மாணவர்களும் விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவிற்காக 118,901 மாணவர்களும் உட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும் 2014 இல் வர்த்தகப் பிரிவிற்காக 119,093 மாணவர்கள் உட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் 2015 இல் வர்த்தகப் பிரிவிற்காக 117,238 மாணவர்கள் உட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) பரீட்சைத் திணைக்களத்தின் செயலாற்றல் மீதான அறிக்கையின் பிரகாரம், 2015 இல் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்காக தோற்றிய 210,340 பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 2.83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 5,930 பாடசாலை பரீட்சார்த்திகள் அனைத்துப் பாடங்களிற்காகவும் ‘‘ஏ’’ சித்திகளை பெற்றிருந்த அதேநேரம் அனைத்துப் பிரிவுகளிலுமுள்ள அனைத்துப் பாடங்களிலும் 8.64 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 18,183 பாடசாலைப் பரீட்சார்த்திகள் சித்தியடைந்திருக்கவில்லை. மேலும், பௌதீகவியல் விஞ்ஞானப் பிரிவு மற்றும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு என்பவற்றில் முறையே பாடசாலைப் பரீட்சார்த்திகளின் 51.65 சதவீதத்தினர் மற்றும் 48.03 சதவீதத்தினர் பல்கலைக்கழக நுழைவுக்காக தகைமை பெற்றிருந்த அதேநேரம் வர்த்தகப் பிரிவில் கற்ற பாடசாலைப் பரீட்சார்த்திகளின் 70.38 சதவீதத்தினர் பல்கலைக்கழக நுழைவுக்கான தகைமையின் உயர் சதவீதத்தை பதிவு செய்திருந்தனர். இலங்கையில் முதலாவது முறை 2015 இல் நடைபெற்ற

க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்காக தோற்றிய பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவு என்பவற்றில் கல்விகற்ற பாடசாலைப் பரீட்சார்த்திகள் முறையே 50.09 சதவீத மற்றும் 60.66 சதவீத சித்தியெய்தல் விகிதங்களை பதிவு செய்திருந்ததுடன் 11 பாடசாலைப் பரீட்சார்த்திகள் மாத்திரம் அனைத்துப் பாடங்களிற்காகவும் ‘‘ஏ’’ சித்தியினைப் பெற்றிருந்தனர்.

(உ) நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் தொழில்நுட்பவியல் விஞ்ஞானப் பிரிவில் ஆசிரியர் பற்றாக்குறைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில்நுட்பவியல் பிரிவுகளிற்காக 660 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவியிருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தினால் 250 தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 195 பீடங்களிற்கான கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாணவர்களின் பாவணைக்காக 86 பீடங்கள் திறக்கப்பட்டிருந்தன. மேலும், கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நிர்மாணிக்கப்படுவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்த 35 மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீட கட்டிடங்களில் 17 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் மட்டுமே பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாணவர்களின் பாவனைக்காக 12 பீடங்கள் திறக்கப்பட்டிருந்தன. கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள 06 தேசிய பாடசாலைகளில் 2015 மார்ச் மாதத்தில் கணக்காய்வாளர்களால் வேலைத்தள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேல் மாகாணத்தில் ஹன்வெல்ல மத்திய கல்லூரி, ஹோமாகம மத்திய கல்லூரி, ஹொரண தக்சிலா மகா வித்தியாலயம், வெதற மகா வித்தியாலயம், வேவிற்ற மகா வித்தியாலயம் மற்றும் பொலனறுவை மகா வித்தியாலயம் என்பவற்றிலுள்ள மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீட கட்டிடங்களின் பல சுவர்களில் வெடிப்புக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால், கட்டிட நிர்மாண வேலைகள் மீது தர உறுதிப்பாட்டு நுட்பமுறைகள் போதியளவில் இருக்கவில்லை என இது உறுதிப்படுத்தியிருந்தது.

(ஆ) வழமையாக, வருடாந்த கொள்வனவுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை செயற்திட்டம் காலதாமதங்களுடன் ஆரம்பிக்கின்றது. வருடாந்த கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான விவசாய உபகரணம் மற்றும் உணவு செயன்முறைப்படுத்தும் உபகரணம் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் 2015 மார்ச் 18 இல் ஆரம்பிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 15 இலேயே உரிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 2015 மார்ச் 18 இற்கு முன்னர் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான தளபாடப் பொருட்களின் கொள்வனவுக்கான ஒப்பந்தம் 2015 ஆகஸ்ட் 20 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த பொருட்களின் 18 சதவீதம் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தொழில்நுட்பப் பிரிவிற்கான

மாணவர்களின் பாவனைக்கான மோட்டார் இயந்திரவியல் உபகரணத்தின் பிரேரிக்கப்பட்ட கொள்வனவுகள் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(இ) 2014 இல் செயற்திட்டமானது மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்களின் பாவனைக்காக இயந்திரவியல், சிவில் மற்றும் மின் பொறியியல் உபகரணங்களையும் கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ரூபா 1,697.64 மில்லியன் கிரயத்தில் 07 பொதிகளின் கீழ் 166 உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொதி ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு பதிலாக உருப்படி ரீதியாக விலைமனு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தால் குறைந்த விலையில் ஒப்பந்தத்தை வழங்கியிருக்கலாம் என அவதானிக்கப்பட்டிருந்தது. 07 பொதிகளில் 02 பொதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையானது விலைமனு உருப்படி ரீதியாக மதிப்பிடப்பட்டிருந்தால் உபகரணங்களும் கருவிகளும் ரூபா 55.73 மில்லியனில் கொள்வனவு செய்ய முடிந்திருக்குமென வெளிப்படுத்தியிருந்தது. எனினும், அத்தகைய உபகரணங்களும் கருவிகளும் ரூபா 66.52 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 166 உருப்படிகளில் மீளாய்வாண்டின் போது மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்களின் பாவனைக்கு தேவையாகவிருந்த 71 உருப்படிகள் மாத்திரம் ரூபா 373.44 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்வதற்கான உருப்படிகளின் தேவையானது கொள்வனவுச் செய்முறையின் போட்டித்தன்மை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிகளின் சிக்கனத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு முடியுமானதாக விலைமனு கோரப்பட்ட நேரத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என இது குறித்துக்காட்டுகின்றது.

(iii) நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், 250 மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்களிற்கான உபகரணங்களும் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டு உரிய பீடங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86 மஹிந்தோதய தொழில்நுட்பவியல் பீடங்கள் மாத்திரம் உரிய நோக்கங்களிற்காக வழங்கிய உருப்படிகளை பயன்படுத்தியிருந்தது.